முருகப்பெருமான் துணை

**மகான் கலிகம்ப நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.10.2023, வியாழக்கிழமை

1. சரவணப் பெருமான் அருளியே
சர்வ ஞானம் பெற்ற அரங்கா
சரவணச் சுடரேற்றி அடைந்த
சற்குருவே ஞான தேசிகா
2. தேசிகனே தசவாசல் திறவான
திருவிழா கால இதுநாளில்
ஆசி அறிவுரை தன்னை இனிதே
அறிவிப்பேன் கலிக்கம்ப நாயனார் யானும்
3. யானும் சோபகிருது தரிவை திங்கள்
இருபானை திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 25 ம் நாள், 12.10.2023, வியாழக்கிழமை)
ஞான உலகம் அமைய உரைப்பேன்
ஞானிக்கு கலியினில் ஆற்றலதை
4. ஆற்றலதை பிரம்ம வேளையில்
அமிழ்தமாக சுரக்கச் செய்து
மாற்றம் சொர்க்க வாசல் திறவாக
மகத்துவம் ஆறுமுகனார் செய்திருக்க
5. இருக்கவே இந்தவித நாளதனில்
எல்லா மக்களும் வணங்கியே
கருத்தாக அரங்கன் தரிசணம்
கண்டுமே தீட்சைதனை ஏற்க
6. ஏற்கவே வேலவனே தந்த
இணையிலா காப்புத்தீட்சையாக
அற்புதம் ஏற்பவர்க்குக் கிட்டும்
அன்னதானம் செய்து தருமவழி

7. தருமவழி நடக்கும் மக்களுக்கு
தானாக அவரவர் சயனவழி
வருமுலகில் காட்சி தீட்சை
வரமாக வந்து அருளுவாரப்பா
8. அப்பனே கலியினில் அரங்கனை
அளவிலா மகாசக்தியும் வியந்து
ஒப்புக்கொண்டு இணைந்து
ஓங்காரக் குடிலில் சூட்சும வடிவில்
9. வடிவில் கலந்துள்ளனரப்பா
வருகையால் அரங்கன் சக்தி
இடர் வெல்லும் பெருஞ்சக்தியாக
இவ்வுலகை மீட்கும் காக்கும்
10. காக்கும் வேலவனின் மகா சக்தியாக
கருணை கூடிய சக்தியாக
ஆக்கமுடன் வடிவம் தாங்கி
அகிலமாற்றம் சடுதி நடக்குமப்பா
11. அப்பனே பிரணவக் குடிலுக்கு
அதீத சக்தி வரமும் கிட்டியதால்
ஒப்புக்கொண்டு இணைந்தால்போதும்
உங்களுக்கு ஞானியாகும் வாய்ப்பு கிட்டும்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—